

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.3.2026) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் – உயர்நீதிமன்றத்தின்

# பெண் வழக்கறிஞர்கள் உள்பட 160 வழக்கறிஞர்கள் கழகத்தில் இணைந்தனர்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



**சென்னை,மார்ச்.19-**

**முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், முன்னாள் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி.எச்.மனோஜ் பாண்டியன், வழிகாட்டுதலின்படி சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட 160க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், முன்னாள் எம்.எல்.ஏ. வழக்கறிஞர் பி.எச்.மனோஜ் பாண்டியன், வழிகாட்டுதலின்படி நேற்று (18.03.2026) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களான பி.விஜய குமார், டி.நந்த குமார், ஏ.சத்யா, சி.ராகவன், ஏ.டி.நாகேந்திரன், எஸ்.குணசேகரன், எம்.பெருமாள், ஜி. ஜெய்சிங்க, முத்துகுமரன், எஸ்.பாலாஜி, ரோட்டரி என். சிவக்குமார், நிக்சன், திருமதி. அதிசயா, டி.பவித்ரா, பி.லீனா உள்ளிட்ட 160க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, முன்னாள் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி.எச். மனோஜ்பாண்டியன், தி.மு.க. சட்டத்துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை, வழக்கறிஞர் திருமாறன், வழக்கறிஞர் ஆர்.வி.பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

# உழைப்போர் உரிமை இயக்கம் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு!



**சென்னை,மார்ச்.19-**

**முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து உழைப்போர் உரிமை இயக்கத்தின் மாநில நிர்வாகிகளான ஆலோசகர் எஸ்.குமாரசாமி, மாநில தலைவர் கு.பாரதி, பொதுச்செயலாளர் எஸ்.ஜானகிராமன், செயலாளர் கே.சுரேஷ், பொருளாளர் பி.நாகராஜ், மாவட்ட இணை அமைப்பாளர்கள் எஸ்.யுவராஜ், எம்.உமார்பாரூக் ஆகியோர் வரும் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.03.2026) மாலை, சென்னை அண்ணாஅறிவாலயத்தில்உள்ளகழகஅலுவலகத்தில் உழைப்போர் உரிமை இயக்கத்தின் (UUI) மாநில நிர்வாகிகளான ஆலோசகர் எஸ்.குமாரசாமி, மாநில தலைவர் கு.பாரதி, பொதுச் செயலாளர் எஸ்.ஜானகிராமன், செயலாளர் கே.சுரேஷ், பொருளாளர் பி.நாகராஜ், மாவட்ட இணை அமைப்பாளர்கள் எஸ்.யுவராஜ், எம்.உமார் பாரூக் ஆகியோர் நேரில் சந்தித்து சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களை, மாநகராட்சியில்மீண்டும்பணியமர்த்திமைக்கு நன்றி தெரிவித்ததோடு எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், மதச்சார்பின்மை மற்றும் மாநில உரிமைகளுக்காக தி.மு.கழகத்திற்கும் – அதன் கூட்டணிக்கட்சிகளுக்கும்தங்கள்ஆதரவை தெரிவித்தனர். அதுபோது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு உடனிருந்தார்.



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் கிழக்கு பகுதி நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக் கூட்டம் நேற்று (18.03.2026 – புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் நடைபெற்ற கூட்டத்தில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் இரா.விடுதலை பகுதி கழகச் செயலாளர் ஐ.சி.எப். வ.முரளிதரன், கே.சந்துரு, ஆர்.எஸ்.சித்திக், எஸ். தனசேகர், ம.அசோக் குமார், எம்.தாவத் பீ., ச.ஸ்ரீதனி, என் பொன்முடி கேட் ராஜ்குமார் மற்றும் BLA2,BDA,BYO ஆகியோர் கலந்து கொண்டனர்.






முதலாம் ஆண்டு

நினைவு அஞ்சலி

பொன்பேத்தி

மிசா.இரா. துரை மாணிக்கம்

முன்னாள் ஒருங்கிணைந்த மாவட்ட கழக அவைத்தலைவர்
முன்னாள் கழக தலைமை செயற்குழு உறுப்பினர்
முன்னாள் ஆவுடையார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர்

தோற்றம் : 27.01.1941 ✣ மறைவு : 19.03.2025

தும்பைப்பூ வெள்ளுடையில் தோன்றிச் சிரிப்பவரே!
கம்பீரமாக என்றும் கழகம் வளர்த்தவரே!
விஞ்சுபுகழ் வரலாற்றில் செஞ்சுடராய் நிலைத்தவரே!
நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்!
வணங்குகின்றோம்!

துரை.இராமசாமி B.E.,
சித.இராஜேந்திரன் D.COP.,
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர்
S.சுந்தரபாண்டியன் M.Sc(Agri).,MBA.,FRCS LONDON
முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் புதுக்கோட்டை தெற்கு

மற்றும் குடும்பத்தினர்கள்